FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(~~Under Section 173 BNSS~~) Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301613

1. District : திண்டுக்கல் மாவட்டம் PS: 2வது.த.க பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 15/2026 முத.அ. எண் Date: 10.09.2026 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988, as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —

(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 28.08.2026 at 11.30 hrs to 09.09.2026 at 12.15 hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 09.09.2026 at 17.10 hrs over mobile phone

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.09.2026 Time : நேரம் 07.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 கி.மீ வடகிழக்கு திசையில்

Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி காணப்பாடி கிராம நிர்வாக அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. கோவிந்தராஜ் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : சுப்புராஜ் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 58/2026 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : இந்தியன் நாட்டினம் (e) Passport No. : — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — வழங்கப்பட்ட நாள் Place of Issue : — வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : 294, கிளத்துவிரு, K. புதுப்பட்டி, காணப்பாடி கிராமம், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if nedessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. பாண்டியராஜன், கிராம நிர்வாக உதவியாளர், காணப்பாடி கிராம நிர்வாக அலுவலகம், 2. திரு. ராமலிங்கம், உதவியாளர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: —
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Gnanaraj 10/09/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Selvakumar 10.09.26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

10.09.2026 at 10.00 hrs.

Name: பெயர் ..H. பழனிச்சாமி
Rank: நிலை .....No. எண் .....

காவல் ஆய்வாளர்,
மாதவல் தீருப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திண்டுக்கல்.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:15/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:–

Column No.12, FIR Contents:–

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 10.09.2026–ம் தேதி 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, காணப்பாடி கிராமம், K.புதுப்பட்டி, 294, களத்து வீடு, சுப்புராஜ் மகன் திரு.S.கோவிந்தராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்த புகாரை பெற்று 10.09.2026–ம் தேதி காலை 08.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர். S.கோவிந்தராஜ், வயது 58/2026, த/பெ சுப்புராஜ், 294, களத்து வீடு, K.புதுப்பட்டி, காணப்பாடி கிராமம், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம், பெறுநர், காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல், அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமான காணப்பாடி புதுப்பட்டி கிராமத்தில் சுமார் 7.56 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் நாங்கள் குடும்பமாக விவசாயம் செய்து வருகிறோம். எனக்கு சொந்தமான காணப்பாடி கிராம சர்வே எண். 295–1Bல் அடங்கிய நிலம் 1.56 ஏக்கர் நிலத்தில் கடந்த 2022ல் ஆழ்துளை கிணறு அமைத்தேன். அதற்கு தட்கல் முறையில் இலவச ஆழ்துளை கிணறு மின் இணைப்பை கடந்த 2024ல் எனது பெயரில் வாங்கி மோட்டார் பொருத்தி தற்போது வரை இயக்கி வருகிறேன். தற்போது அதில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. எனவே கடந்த 19.08.2026 ம் தேதி எனக்கு சொந்தமான காணப்பாடி கிராம சர்வே எண். 294ல் அடங்கிய 1 ஏக்கர் 83 செண்ட் நிலத்தில் புதிதாக ஒரு ஆழ்துளை கிணறு அமைத்தேன். அதில் நல்ல தண்ணீர் வளம் இருந்தது. இதனால் ஏற்கனவே எனது பெயரில் சர்வே எண். 295–1Bல் பெற்ற இலவச ஆழ்துளை மின் இணைப்பில் உள்ள இரண்டு ஆழ்துளை மின் மோட்டாரையும், புதிதாக சர்வே எண். 294ல் போடப்பட்ட ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்படும் மின் மோட்டாரையும் மாறி மாறி இயக்குவதற்கான Change Over

Switch வைப்பதற்கு முடிவு செய்தேன். அது தொடர்பாக FMB, அடங்கலில் ஆழ்துளை கிணறு போடப்பட்ட விபரத்தை குறிப்பிட்டு சான்று பெறுவதற்காக 28.08.2026 அன்று காலை சுமார் 11.30 மணிக்கு நானும் எனது மகன் வினோத்தகுமாரும் காணப்பாடி VAO அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த VAO திரு.பாண்டியராஜன் அவர்களை சந்தித்து ஆழ்துளை கிணறு போடப்பட்ட இடத்தை குறிப்பிட்டு சான்றிதழ் வழங்குமாறு கேட்டேன். உடனே VAO திரு.பாண்டியராஜன் அவர்கள் அவரது உதவியாளர் திரு.ராமலிங்கம் அவர்களும் எங்கள் நிலத்தை வந்து பார்ப்பதாக தெரிவித்துவிட்டு எங்களுடன் வந்து நிலத்தை பார்வையிட்டார்கள். அப்போது VAO திரு.பாண்டியராஜன் அவர்கள் அலுவலக செலவுக்காக பணம் கொடுங்கள் அப்பொழுதுதான் சான்றிதழ் கொடுக்க முடியும் என்று தெரிவித்து VAO அலுவலத்திற்குள் போகலாம் வாங்க என்றார். நானும் எனது மகன் வினோத்குமாரும் காணப்பாடி VAO அலுவலகத்திற்கு வந்தோம். அதன் பின்பு திரு.பாண்டியராஜன் அவர்களும், திரு.ராமலிங்கம் அவர்களும் VAO அலுவலகத்திற்கு வந்தார்கள். பின்னர் நாங்கள் கொடுத்த வேளாண்மை மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்ப படிவத்தில் சர்வே எண். 294ல் புதிதாக அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றை குறிப்பிட்டு சான்று வழங்கினார். சான்று வழங்கிவிட்டு அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்குமாறு கேட்டார். அதற்கு நான் பணம் எதுவும் இல்லை என்று கூறினேன். அதற்கு VAO திரு.பாண்டியராஜன் அவர்கள் ரூ.1,000/- கொடுங்கள் என்று கூறினார். நான் ரூ.500/- மட்டும் தான் உள்ளது என்றேன். அதற்கு திரு.பாண்டியராஜன் அவர்கள் அதனை அங்கிருந்த அவரது உதவியாளர் திரு.ராமலிங்கம் அவர்களிடம் கொடுக்குமாறு கூறினார். திரு.ராமலிங்கமும் என்னிடமிருந்து ரூ.500/-ஐ வாங்கி வைத்துக்கொண்டார். அதன் பின்னர் நாங்கள் அங்கிருந்து வந்துவிட்டோம். எனது மகன் திரு.வினோத்குமார் அவர்கள் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின் லஞ்சத்திற்கு எதிராக புகார் அளிப்பதற்கான வாட்ஸ் அப் எண். 9498180936 என்ற எண்ணிற்கு லஞ்சம் கேட்டது தொடர்பாக புகார் அனுப்பினார். பின்னர் VAO விடம் பெற்ற சான்றுகளை எடுத்துக்கொண்டு 29.08.2026 அன்ற சுமார் 11.30 மணிக்கு வடமதுரை மின்சார வாரிய உதவி பொறியாளர்

அலுவலகத்திற்கு சென்று AE அவர்கள் சந்தித்து விபரங்களை நானும் எனது மகனும் தெரிவித்தோம். அதனை வாங்கி பார்த்த AE அவர்கள் ஏற்கனவே போர் போடப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் சர்வே எண். 295-1Bக்கும் சேர்த்து சான்றும் பெற வேண்டும் என்றும் தற்போது சர்வே எண். 294ல் புதிதாக போடப்பட்ட ஆழ்துளை கிணறுக்கு மட்டுமே சான்று பெறப்பட்டுள்ளது எனவும், இரண்டையும் குறிப்பிட்டு சான்று பெற்று மின்சார வாரியத்தின் இணைய தளத்தில் ஆன்லைன் விண்ணப்பம் செய்தால் இரண்டு ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களை இயக்குவதற்கான Change Over Switch வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். அதன்பின்னர் 31.08.2026ம் தேதி நானும் எனது மகனும் வேடசந்தூருக்கு ஒரு வேலையாக வந்துவிட்டு அதன் பின்பு திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்திற்கு வந்து, ஏற்கனவே வாட்ஸ்அப் புகார் அனுப்பியது தொடர்பாக கேட்டோம். மேலும் VAO திரு.பாண்டியராஜ் அவர்களுக்கு ரூ.500/- அலுவலக செலவிற்காக வாங்கியது தொடர்பாக தெரிவித்தோம். மேலும் AE அவர்கள் சான்றிதழ் பெற அறிவுறுத்தியுள்ளதாகவும், அதனால் VAO அவர்களை சென்று சந்திக்க உள்ளதாகவும் தெரிவித்தோம். அவ்வாறு சந்திக்கும்போது காணப்பாடி VAO அவர்கள் லஞ்சமாக பணம் கேட்டால் தங்களிடம் வந்து புகார் அளிக்குமாறும், புகார் அளித்தால் பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மெற்கொள்ளப்படும் என்று கூறினார்கள். அதன் பின்பு மதியம் சுமார் 01.30 மணிக்கு காணப்பாடி VAO அலுவலகத்திற்கு சென்று நானும் எனது மகன் வினோத்குமாரும் VAO திரு.பாண்டியராஜன் அவர்களை சந்தித்து வடமதுரை AE தெரிவித்த விபரங்களை கூறினோம். அதற்கு VAO திரு.பாண்டியராஜன் அவர்கள் புதிதாக போடப்பட்ட ஆழ்துளை கிணற்றிற்கு சான்றிதழ் தர முடியும். ஏற்கனவே மின் இணைப்பு உள்ள ஆழ்துளை கிணறுக்கு எப்படி சான்றிதழ் தரமுடியும் எனக் கேட்டார். எனவே எனது மகன் அவரது மொபைல் எண். 7338953049 என்ற எண்ணிலிருந்து வடமதுரை AE அவர்கள் மொபைல் எண். 9445852721 என்ற எண்ணிற்கு அழைத்து VAO அவர்களை AE அவர்களிடம் பேசுமாறு தெரிவித்து பேசச் சொன்னார். AE அவர்களும் இரண்டு ஆழ்துளை கிணறுகளையும்

குறிப்பிட்டு சான்றிதழ் கொடுத்தால் மட்டுமே Change Over Switch வைப்பதற்கு அனுமதி தர முடியும் என்று VAO அவர்களிடம் கூறினார். ஆனால் VAO அவர்கள் எங்களிடம் AE சொல்கிறபடியெல்லாம் செய்ய முடியாது, நீங்கள் தாலுகா அலுவலகத்திற்கு சென்று தனியாக விண்ணப்பம் கொடுங்கள், அவ்வாறு கொடுத்தால்தான் சான்றிதழ் தர முடியும் என்று கூறினார். நாங்களும் வந்துவிட்டோம். அதன் பின்பு EB அலுவலகத்தில் விசாரித்ததில் இரண்டு ஆழ்துளை கிணறுகளையும் குறிப்பிட்டு சான்று பெற்றால்தான் இரண்டு ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களை இயக்குவதற்கான Change Over Switch வைக்க முடியும் என்று தெரிவித்தார்கள். எனவே மறுபடியும் இரண்டு மூன்று நாட்கள் காணப்பாடி VAO அலுவலகம் சென்று VAOஐ சந்திக்க முயற்சி செய்தோம். ஆனால் VAO அவர்கள் கோவிலுக்கு மாலை போட்டுள்ளார் என்றும், விடுமுறை என்றும் கூறினார்கள். மறுபடியும் 08.09.2026 அன்று சுமார் 11.30 மணிக்கு காணப்பாடி VAO அலுவலகத்திற்கு சென்று கேட்டோம். VAO அவர்கள் வெளியே சர்வே பணிக்காக சென்றுள்ளதாக தெரிவித்தார்கள். இந்நிலையில் இன்று 09.09.2026ம் தேதி சுமார் 12.15 மணிக்கு நானும் எனது மகனும் காணப்பாடி VAO அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த VAO திரு.பாண்டியராஜன் அவர்களை சந்தித்து இரண்டு ஆழ்துளை கிணறுகளையும் FMBல் குறிப்பிட்டு சான்றிதழ் வழங்குமாறு கேட்டோம். அதற்கு VAO திரு.பாண்டியராஜன் மற்றும் அவரது உதவியாளர் திரு.ராமலிங்கமும் எங்களுடன் வந்து எங்களது தோட்டத்தினை பார்வையிட்டு இரண்டு ஆழ்துளை கிணறுகளையும் குறித்து கொண்டார்கள். பின்னர் VAO அலுவலகத்திற்கு வந்த பின்னர் VAO திரு.பாண்டியராஜன் அவர்கள் எங்களிடம் அவ்வாறு சான்றிதழ் தர வேண்டும் என்றால் ரூ.2,000/- லஞ்சமாக அவருக்கு கொடுத்தால்தான் சான்றிதழ் தர முடியும் என்றார். அதற்கு நான் ஏற்கனவே ரூ.500/- கொடுத்துள்ளேன் என்றேன். அதற்கு அவர் ரூ.2,000/-ம் கொடுத்தால்தான் சான்றிதழ் தரமுடியும் என்றும், அதனை அவரது உதவியாளர் திரு.ராமலிங்கம் அவர்களிடம் கொடுக்குமாறு கூறினார். நான் பணம் எதுவும் கொண்டு வரவில்லை, சாயங்காலமோ அல்லது நாளைக்கோ வந்து கொடுத்துவிடுவதாக தெரிவித்துவிட்டு

வேளாண்மை மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்ப படிவம் இரண்டையும் VAO திரு.பாண்டியராஜன் அவர்களிடம் கொடுத்துவிட்டு எனது மொபைல் எண்ணை திரு.ராமலிங்கம் அவர்களிடம் தெரிவித்துவிட்டு வந்துவிட்டோம். பின்னர் 09.09.2026 மாலை சுமார் 05.10 மணிக்கு திரு.ராமலிங்கம் அவர்கள் எனது மொபைல் எண். 9962020439க்கு அவரது மொபைல் எண். 9944286417 என்ற எண்ணிலிருந்து அழைத்தார். அதனை என் மகன் திரு.வினோத்குமார் எடுத்து Loud Speakerல் போட்டு பேசினார். அப்போது திரு.ராமலிங்கம் அவர்கள் பணம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். அதற்கு என் மகன் அவரிடம் தனக்கு பல்வலி இருப்பதால் மருத்துவமனை வந்திருப்பதாக தெரிவித்தார். அதற்கு திரு.ராமலிங்கம் அவர்கள் சான்றிதழ் ரெடியாகிவிட்டதாகவும், பணம் ரூ.2,000/–ஐ எடுத்துக்கொண்டு வியாழக்கிழமை காலை வந்து VAO அலுவலகத்தில் அவரை சந்தித்து கொடுத்தால் சான்றிதழை தருவதாக கூறினார். போனில் எனது மகனுடன் பேசிக்கொண்டே VAO திரு.பாண்டியராஜன் அவர்களிடம் நாளைக்கு வருவதாக கூறுகிறார்கள் என்ற விபரத்தை திரு.ராமலிங்கம் கூறினார். அதற்கு VAO அவர்கள் சரி வரச் சொல்லுங்கள் என்று கூறினார். மேலும் இது சம்மந்தமாக லஞ்சமாக பணம் கேட்டால் திண்டுக்கல் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்குமாறு அறிவுறுத்தியதாலும், எங்களது இரண்டு ஆழ்துளை கிணறுகளையும் குறிப்பிட்டு சான்றுகள் பெறுவதற்காக லஞ்சமாக என்னிடம் ரூ.500/–ம் பெற்றுக்கொண்டும், மேலும் ரூ.2,000/–ம் லஞ்சமாக கேட்கும் கிராம நிர்வாக அலுவலர் திரு.பாண்டியராஜன் மற்றும் அவரது உதவியாளர் திரு.ராமலிங்கம் ஆகியோர்களுக்கு பணத்தை லஞ்சமாக கொடுத்து வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, என்னிடம் ரூ.2,000/–ம் லஞ்சமாக கேட்ட காணப்பாடி கிராம நிர்வாக அலுவலர் திரு.பாண்டியராஜன் மற்றும் அவரது உதவியாளர் திரு.ராமலிங்கம் ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு இன்று 10.09.2026ம் தேதி இந்த புகாரினை அளிக்கிறேன். இத்துடன் பணம் ரூபாய் 2,000/–ம் கொண்டு வந்துள்ளேன். மேலும் 28.08.2026 அன்று காணப்பாடி கிராம நிர்வாக அலுவலர் திரு.பாண்டியராஜன் கையொப்பமிட்டு சான்றளித்த வேளாண்மை மின் இணைப்பு பெறுவதற்காக விண்ணப்ப படிவத்தினையும்

இத்துடன் இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இப்படிக்கு, Sd/– xxxxx (S.Govindaraj, 10.09.2026)

Sir, Received the complaint on 10.09.2026 at 07.00hrs and made a Confidential Verification on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC, Cr.No.15/2026, u/s.7(a) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018, was registered today at 08.00 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 10.09.2026).

Original FIR along with Computer Written complaint of Tr.S.Govindaraj, Age.58/2026, S/o.Subburaj, 294, Kallathu Veedu, K.Puthupatti, Kanapadi Village, Vedasandur Taluk, Dindigul District and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(P.Palanisamy), 10/09/26
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul